செ.வெ.எண்.21 நாள்.07.04.2017

**திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

--------

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நாங்குநேரி, வள்ளியூர், களக்காடு, இராதாபுரம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த கிராம ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆப்ரேட்டர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில் ஆகிய நகராட்சி பகுதிகளிலும், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் தாக்கம் உள்ளது. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டெங்கு பாதிக்கப்பட்ட 8 நபர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த எண்ணிக்கையை குறைக்கும் வகையில் ADS கொசுக்களை அடியோடு ஒழிக்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கொசு ஒழிப்பு பணிகளுக்காக 20 கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஊராட்சி செயலர்களும், சுகாதார பணியாளர்களும் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். டெங்கு நோயினால் இரத்தத்தில் திரவ தன்மை அதிகமாகி உயிரிழப்பும், ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதில் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பல்வேறு பகுதிகளில் குடிநீரை நீண்ட நாட்களுக்கு சேமித்து தொட்டிகளில் ஊற்றி வைக்கின்றனர். இவைகளை முறையாக மூடி பாதுகாக்க விட்டால் டெங்கு கொசு பெருகி பரவும் ஆபத்து உள்ளது. எனவே, கிராமப்பறங்களில் குடிநீர் விநியோகிக்கும் போது முறையாக குளோரின் கலந்து விநியோகிக்க வேண்டும். அருகே உள்ள ஊராட்சிகளும் ஒருங்கிணைந்து ஒரே நேரத்தில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். கொசு அதிகம் உள்ள பகுதிகளிலும், வீடுகளிலும் கொசு புகை மருந்து அடிக்க வேண்டும். அனைத்து மக்களையும் பாதுகாக்க ஒருங்கிணைந்து இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

டெங்கு பாதிப்பு பொதுமக்களுக்கு மட்டுமல்லாது உங்களுக்கும், உங்கள் உறவினர்களுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை உணர்ந்து தீவிரமாக இப்பணிகளில் ஈடுபட வேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ள கொசு ஒழிப்பு பணியாளர்கள் கிராம ஊராட்சிகளிலுள்ள தூய்மை காவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து தீவிரமாக விழிப்புணர்வு பணிகளை செய்திட வேண்டும். சுகாதாரத்தை பேணுவது மூலம் டெங்கு ஒழிப்பது மட்டுமல்லாது பல்வேறு நோய்களையும் கட்டுப்படுத்த முடியும். முறையாக ஒட்டு மொத்தமாக கொசு புகை மருந்து அடித்தல், சுத்தப்படுத்துதல் மற்றும் குடிநீரில் குளோரின் செய்தல் பணிகளை சிறப்பாக செய்வது மூலம் டெங்கு கொசுக்களை முழுமையாக ஒழித்து திருநெல்வேலி மாவட்டம் டெங்கு இல்லாத, சுகாதார மாவட்டமாக திகழ சிறப்பாக பணியாற்றிட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.ராம்கணேஷ், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், ஊரக வளர்ச்சித் துறை உதவி செயற்பொறியாளர் திரு.கிருஷ்ணபெருமாள், வட்டார மருத்துவ அலுவலர் மரு.கோலப்பன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள், பம்பு ஆப்ரேட்டர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.